# QB365 Question Bank Software Study Material

## குடிமையியல் - குடிமக்களும் குடியுரிமையும் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

### 2 மதிப்பெண் வினாக்கள்

15 x 2 = 30

1) குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.

**பதில் :** குடியுரிமை இரண்டு வகைப்படும். அவை இயற்கை குடியுரிமை, இயல்புக்குடியுரிமை.

2) ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை ?

**பதில் :** **ஓர் இந்திய குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் :**
மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்கு அளிக்கும் உரிமை இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை, இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் உறுப்பினர் ஆவதற்கான உரிமை.

3) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக.

**பதில் :** **இந்திய நற்குடிமகனின் மூன்று பண்புகள் :**
1. அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடத்தல்
2. சட்டத்துக்கு கீழ்படிதல்
3. வேற்றுமைக்கான மறந்து நடத்தல்

4) இந்தியக் குடிமகனாவதற்குரிய ஐந்து வழிமுறைகளை எழுதுக?

**பதில் :** 1. பிறப்பால் குடியுரிமை பெறுதல்.
2. வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்.
3. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்.
4. இயல்பு குடியுரிமை.
5. பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

5) 1955 ஆம் ஆண்டு இந்திய குடியுரிமைச் சட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?

**பதில் :** 1955ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் ஒருவர் இந்திய குடியுரிமையைப் பெறுதலையும் நீக்குதலையும் பற்றி குறிப்பிடுகின்றது.

6) உலகளாவிய குடியுரிமை பற்றி எழுதுக

**பதில் :** 1. ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமகன் என்பதை விட உலகளாவிய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அங்கம் என்பதே உலகளாவிய குடியுரிமையாகும்.
2. உலக மக்கள் அனைவருக்கும் உரிமைகளும், குடிமைப் பொறுப்புகளும் இயற்கையாகவே உள்ளன.
3. புதிய சமூகத்தை உருவாக்குவதில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெறுவதே உலகளாவிய குடியுரிமையின் அடிப்படையாகும்.

7) ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை பற்றி எழுதுக.

**பதில் :** ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்கள் இரண்டு வகையினராக அழைக்கப்படுகிறார்கள்.
**1. அந்நியர் (Alien)**
1. ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.
2. எ.கா. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்.
**2. குடியேறியவர் (immigrant)**
ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்.

8) குடிமகன் என்போர் யார்?

**பதில் :** ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன்

நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.

9) நாட்டுரிமை என்றால் என்ன?

**பதில் :** பூர்விகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும்.

10) 'குடியேறியவர்' என்போர் யார்?

**பதில் :** ஒரு நாட்டில் எவ்வித தடையுமின்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணிபுரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் என அழைக்கப்படுகிறார்.

11) 'உலகளாவிய குடியுரிமை' - குறிப்பு வரைக.

**பதில் :** (i) ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமகன் என்பதைவிட உலகளாவிய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அங்கம் என்பதே உலகளாவிய குடியுரிமை ஆகும்.
(ii) உலக மக்கள் அனைவருக்கும் உரிமைகளும், குடிமைப் பொறுப்புகளும் இயற்கையாகவே உள்ளன.
(iii) புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெறுவதே உலகளாவிய குடியுரிமையின் அடிப்படை ஆகும்.

12) இந்திய குடியுரிமைச் சட்டம் எப்பொழுது இயற்றப்பட்டது?

**பதில் :** இந்திய குடியுரிமை சட்டம் 1955ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

13) குடிமகன் என்பவர் யார்?

**பதில் :** ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.

14) பிறப்பால் குடியுரிமை பெறுதல் என்றால் என்ன?

**பதில் :** 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.

15) நாட்டுரிமை என்பது என்ன?

**பதில் :** பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 4 x 5 = 20

16) ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

**பதில் : குடியுரிமையை துறத்தல் (தானாக முன் வந்து குடியுரிமையைத் துறத்தல்):**
1. ஒருவர் வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக்குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.
**2. குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்) :** ஓர் இந்திய குடிமகன் தாமாக முன் வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும்பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.
**3. குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்) :** மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.

17) இந்தியக் குடிமகனாவதற்குரிய ஐந்து வழிமுறைகளை விளக்குக.

**பதில் :** 1955ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கான ஐந்து வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. அவைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**I. பிறப்பால் குடியுரிமை பெறுதல்:**

1. குடியுரிமை பிறப்பிடத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.

2. 1987 ஜூலை 1 மற்றும் அதற்கு பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

3. 2004 டிசம்பர் 3 மற்றும் அதன் பிறகு இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் இந்திய குடிமகனாகவும், மற்றவர் சட்டவிரோதமின்றி இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்து இருந்தால் குடியுரிமை பெறுகின்றனர்.

**II. வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்:**

1. 1950 ஜனவரி 26 முதல் 1922 டிசம்பர் 10க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமையை பெறுகிறார்.

2. 2004 டிசம்பர் 3ம் நாள் முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்குள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவளிக் குடிமகனாக முடியாது.

**III. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்:**

1. இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.

2. இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் 7 ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

**IV. இயல்புக் குடியுரிமை:**

1. ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மத்திய அரசு அவருக்கு இயல்பு குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.

2. எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதைத் தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.

3. வெளிநாட்டுக்கு குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்திலும் ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்திலும் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்திலும் மற்றும் நற்பண்புகளோடு இந்திய முக்கிய மொழிகளுள் ஏதேனும் ஒன்றில் போதிய அறிவினை பெரும் பொழுதும் இயல்புக்கு குடியுரிமையைப் பெற தகுதியுடையவராவார்.

**V. பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெரும் குடியுரிமை:**

எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது, இந்திய அரசு, அப்பகுதி மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக் கொள்கிறது. அந்த குறிப்பிட்ட நாளில் இருந்து அவர்கள் இந்திய குடிமக்களாகின்றனர்.

18) 'இயல்புக் குடியுரிமை' பற்றி விவரி?

**பதில் :** (i) ஒருவர் விண்ணப்பத்தின் மூலம் மத்திய அரசு அவருக்கு இயல்புக் குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.

(ii) எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதைத் தடுக்கும் பொருட்டு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

(iii) வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

(iv) ஒருவர் இந்தியாவில் இருக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில் அல்லது ஆண்டு முழுவதும் தங்கியிருக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

(v) நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பில் 8ஆவது அட்டவணையில் ஏதேனும் ஒரு மொழியில் (22 மொழிகளில்) போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமை பெற தகுதியுடையவராவார்.

19) இந்திய குடிமக்களின் உரிமைகளும் கடமைகளும் விளக்குக.

**பதில் :** இந்தியக் குடிமக்களின் உரிமைகளும் கடமைகளும் :

1. அடிப்படை உரிமைகள்
2. மக்களவை தேர்தலுக்கும் மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை.
3. இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை.
4. இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் உறுப்பினராவதற்கான உரிமை.
5. இந்திய அரசியலமைப்பு 42வது சட்டதிருத்தத்தின்படி இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
6. நேர்மையாக வரி செலுத்துதல்.
7. மற்றவர்களின் கருத்துக்களுக்கும் நம்பிக்கைகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளித்தல்.
8. நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றுதல்.
9. சட்டங்களை மதித்தல் மற்றும் கீழ்படிதல்.